**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 59** **நாள்: 27.05.2024**

**சென்னையில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் பணிபுரியவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்கள் ஆகியோரை முதற்கட்டமாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.05.2024) நடைபெற்றது.**

நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல்-2024 வாக்குப்பதிவினைத் தொடர்ந்து, சென்னையில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் 04.06.2024 அன்று பணிபுரியவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்கள் ஆகியோரை முதற்கட்டமாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி (First Randomization) மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.05.2024) நடைபெற்றது.

**பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது:**

நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத்தேர்தல்-2024 வாக்குப்பதிவினைத் தொடர்ந்து, 04.06.2024 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கைக்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இன்று கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் வாக்கு எண்ணிக்கை பணிகளில் ஈடுபடவுள்ள பணியாளர்களை கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யும் பணி முதற்கட்டமாக நடைபெற்றது.

சென்னை மாவட்டத்தில் 3 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் பணிகளில் கூடுதல் இருப்பு 20% உள்பட 357 நுண் பார்வையாளர்கள், 374 மேற்பார்வையாளர்கள், 380 உதவியாளர்கள் மற்றும் 322 அலுவலக உதவியாளர்கள் என மொத்தம் 1433 பணியாளர்கள் பணிபுரியவுள்ளனர். இதில் அலுவலக உதவியாளர்கள் தவிர்த்து 1,111 நபர்களை கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி இன்று நடைபெற்றது. இவர்களுக்கான பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும்.

வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள், பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் 29.05.2024 (புதன்கிழமை) அன்று தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் முன்னிலையில் நடைபெறும்.

சட்டமன்றத் தொகுதிகளின் வாரியாக இரண்டாம்கட்டமாக கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணி வாக்கு எண்ணும் நாளுக்கு 24 மணிநேரத்திற்கு முன்னதாக 03.06.2024 அன்று காலை 8 மணியளவில் நடைபெறும். வாக்கு எண்ணும் டேபிள் வாரியாக பணியாளர்களை

தேர்வு செய்ய இறுதி கணினி குலுக்கல் முறையில் தெரிவு செய்யும் பணியானது வாக்கு எண்ணும் நாளான 04.06.2024 அன்று காலை 5 மணியளவில் நடைபெறும்.

3 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையங்களில் வாக்கு எண்ணும் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வாக்கு எண்ணும் மையங்களில் 1,384 பணியாளர்கள் 3 அடுக்கு பாதுகாப்பு முறையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். வாக்கு எண்ணும் மையங்களில் ஏற்கனவே இராணி மேரி கல்லூரியில் 176, அண்ணா பல்கலைக்கழகத்தில் 210, லயோலா கல்லூரியில் 198 என மொத்தம் 584 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை நாளன்று வாக்குகள் எண்ணும் அரங்கில் டேபிள் வாரியாக சென்னை வடக்கு-இராணி மேரி கல்லூரியில் 106, சென்னை தெற்கு-அண்ணா பல்கலைக்கழகத்தில் 132, சென்னை மத்தியம்-லயோலா கல்லூரியில் 107 என மொத்தம் 345 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் அவர்கள் சென்னை தெற்கு நாடாளுமன்றத் தொகுதி, அண்ணா பல்கலைக்கழக வாக்கு எண்ணும் மையம், மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி, லயோலா கல்லூரி வாக்கு எண்ணும் மையம் மற்றும் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி, இராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையங்களில் வாக்கு எண்ணிக்கைக்கு தேவையான முன்னேற்பாட்டுப் பணிகள் மற்றும் பணியாளர்களுக்கான உணவு, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் குறித்து இன்று (27.05.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சியர்), டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., (கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்)), டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (பணிகள்), திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., (துணை ஆணையாளர் (கல்வி)), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) திரு.ச.சுரேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**